**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23–ஆம் நாள் புதன் கிழமை

**இ.ம எண்.18/2022**

**மற்றும்**

**இ.ம எண்.19/2022**

**மற்றும்**

**இ.ம எண்.20/2022**

**உள்**

**இ.ம.எண்.4/2021**

**உள்**

**அசல் வழக்கு எண்.20/2007**

1. V. பாலு **(இறப்பு)**
2. S. முனியப்பன்
3. S. முனியாண்டி **(இறப்பு)**
4. M. ரமேஷ்
5. A. ஞானசுந்தரம் **(இறப்பு )**
6. A. நாராயணன்
7. A. முத்துக்குமார்
8. மனோகரியம்மாள்
9. தவமணி
10. பவானி ... 1 முதல் 10 மனுதாரர்கள்/வாதிகள்
11. பொன்னுத்தாய்
12. அங்காள ஈஸ்வரி
13. தனலட்சுமி

14. நாகராஜன் ... 11 முதல் 14 மனுதாரர்கள்/இறந்த 3 வது வாதியின் வாரிசுதாரர்கள்/ புரோபோஸ்டு 11 முதல் 14 வாதிகள்

15. நாகலட்சுமி

16. மணிவண்ணன்

17. சாமுண்டீஸ்வரி ... 15 முதல் 17 மனுதாரர்கள்/இறந்த 1 வது வாதியின் வாரிசுதாரர்கள்/ புரோபோஸ்டு 15 முதல் 17 வாதிகள் (3 மனுக்களிலும்)

/எதிர்/

1. K.V.N. கந்தராஜ்

2. K.V.N. சிவகாமி

3. K.V. மரகதம் **(இறப்பு)**

4. K.V. ராஜம்

5. R. சீதாலட்சுமி

6. K.V. அங்கேஸ்வரி

7. K. அசோக்குமார்

8. பிச்சையம்மாள் **(இறப்பு)**

9. S. பாண்டியன்

10. S. கல்யாணசுந்தரம் ... 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

11. S. பால சுப்பிரமணியன்

12. A. பாண்டியன்

13. R. பாண்டி

14. N. சிவக்குமார்

15. N. காசிவிஸ்வநாதன்

16. காமாட்சி சுந்தரம் **(இறப்பு)**

17. காளீஸ்வரி

18. தனலட்சுமி

19. மருததுரை

20. சுரேஷ்ராஜா

21. மாணிக்கவள்ளி

22. லதா

23. சுதா

24. சந்தானலட்சுமி

25. மரகதம் ... 11 முதல் 25 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

26. சபிதா

27. சாந்தி

28. விஜயலட்சுமி

29. சாமி ... 26 முதல் 29 எதிர்மனுதாரர்கள்/26 முதல் 29 உத்தேச பிரதிவாதிகள்/3 வது பிரதிவாதியின் வாரிசுதாரர்கள்

இம்மனு 02.11.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. R. நடராஜன் அவர்களும், 1, 2, 4 முதல் 7, 26 மற்றும் 27 வது எதிர்மனுதாரர்கள்/1, 2, 4 முதல் 7 வது பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. P. வேலுமணி அவர்களும் ஆஜராகியும், 28 மற்றும் 29 எதிர்மனுதாரர்களுக்கு சம்மன் சார்வாகாத நிலையிலும், இதர எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை இல்லையென மேற்குறிப்பு செய்துள்ளதாலும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## பொதுவான உத்தரவு

### 1. இ.ம.எண்.18/2022

இந்த மனு, இ.ம.எண்.4/2021–ல் இறந்துபோன 1 வது மனுதாரர்/1 வது வாதியின் வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 297 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்

கோரி பிரிவு 5 காலவரையறை சட்டம் மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–யின்கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. இ.ம.எண்.19/2022**

இந்த மனு, இ.ம.எண்.4/2021–ல் இறந்துபோன 1வது மனுதாரர்/1வது வாதியின் வாரிசுகளாக 15 முதல் 17 மனுதாரர்களை 15 முதல் 17 வாதிகளாக சேர்க்காததால் நீக்கறவு (abatement ) ரத்து செய்யக் கோரி கட்டளை 22, விதி 9(2) மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–யின்கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இ.ம.எண்.20/2022**

இந்த மனு, இ.ம.எண்.4/2021–ல் இறந்துபோன 1வது மனுதாரர்/1வது வாதியின் வாரிசுகளாக 15 முதல் 17 மனுதாரர்களை 15 முதல் 17 வாதிகளாக சேர்த்து மனுவை மேல்நடத்த உத்திரவிடக் கோரி கட்டளை 22, விதி 3 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–யின்கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. மூன்று மனுக்களிலும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் : –**

அசல் வழக்கு நிலுவையிலிருக்கும்போது 3–ஆம் வாதி இறந்துவிட்டார். அவரது வாரிசுதாரர்களை சேர்க்க வேண்டி, வழக்கிடை விண்ணப்பம் எண்.138/2017 தாக்கல் செய்யப்பட்டு, அது அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வழக்குரையை திருத்தம் செய்ய வழக்கிடை விண்ணப்பம் எண்.4/2021 தாக்கல் செய்யப்பட்டது. இ.ம.எண்.4/2021 நிலுவையிலிருக்கும்போது, 1–ஆம் வாதி இறந்துவிட்டார். அவருடைய வாரிசுதாரர்களை உரிய காலத்திற்குள் சேர்க்கப்படவில்லை. 1–ஆம் வாதியின் வாரிசுதாரர்களை 15 முதல் 17 வாதிகளாக சேர்க்க வேண்டி இ.ம.எண்.20/2022 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு 297 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இ.ம.எண்.18/2022 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு உரிய

காலத்திற்குள் தாக்கல் செய்யப்படாததால் நீக்கறவு (abatement ) ரத்து செய்யக் கோரி இ.ம.எண்.19/2022 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனுக்களை அனுமதிக்க வேண்டும்.

**<u>5. 1–ஆம் எதிர்மனுதாரர்/1–ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த ஆட்சேபணையின் சுருக்கம் : –</u>**

1–ஆம் வாதி, 24.03.2021 அன்று இறந்தார் என்பதை 1–ஆம் எதிர்மனுதாரர் ஏற்றுக் கொள்ளவில்லை. 3–ஆம் பிரதிவாதி, இறந்துவிட்டார். அவருடைய வாரிசுதாரர்களை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல. காலதாமதத்திற்கு போதுமான விளக்கம் இல்லை. ஆகவே, மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

6. இந்த மூன்று மனுக்களையும் அனுமதிக்க போதுமான காரணங்கள் உள்ளதா ? என்பதே இம்மூன்று மனுக்களிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாகும்.

7. **<u>பிரச்சனைகளுக்கான தீர்வு : –</u>**

அசல் வழக்கு எண்.20/2007 வழக்கானது பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் சாட்சிகளின் விசாரணை சமயம், 7–ஆம் பிரதிவாதி வழக்குரையை நீக்கறவு செய்ய வேண்டி வழக்கிடை விண்ணப்பம் எண்.48/2015 தாக்கல் செய்தார். அந்த மனு 06.08.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் C.R.P. No.306/2018 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் அசல் வழக்கின் விசாரணைக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

8. 3–ஆம் வாதி, அசல் வழக்கு நிலுவையிலிருக்கும்போது இறந்துவிட்டார்.

அவருடைய வாரிசுதாரர்களை 11 முதல் 14 வாதிகளாக சேர்க்க வேண்டி வழக்கிடை விண்ணப்பம் எண்.138/2017 தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வழக்குரையை திருத்தம் செய்வதற்காக இ.ம.எண்.4/2021 தாக்கல் செய்யப்பட்டது. இ.ம.எண்.4/2021 நிலுவையிலிருந்த சமயத்தில், 1–ஆம் வாதி இறந்துவிட்டார். அவருடைய வாரிசுதாரர்களான 15 முதல் 17 மனுதாரர்களை சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால், காலதாமதத்தை மன்னிக்க வேண்டியும், வாரிசுதாரர்களை சேர்க்க வேண்டியும், இ.ம.எண்கள்.18 முதல் 20/2022 வரையான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்களில் 1, 2, 4 முதல் 7, 26 மற்றும் 27 வது எதிர்மனுதாரர்கள் தவிர மற்ற எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என தெரிவிக்கப்பட்டது. 1, 2, 4 முதல் 7, 26 மற்றும் 27 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையில் அசல் வழக்கு நிலுவையிலிருக்கும்போது 3–ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார் எனவும், அவருடைய வாரிசுதாரர்களை சேர்க்காமல் இந்த மனு தாக்கல் செய்தது நிலைக்கத்தக்கதல்ல என வாதம் எடுத்துரைக்கப்பட்டது. 3–ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவருடைய வாரிசுதாரர்களை சேர்க்க வேண்டியும், அதில் காலதாமதத்தை மன்னிக்க வேண்டியும், வழக்கிடை விண்ணப்பம் எண்.1/2021 முதல் 3/2021 வரை தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுக்களும் நிலுவையில் உள்ளன.

9. இந்த மனுவில், 3–ஆம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான 26 முதல் 29 எதிர்மனுதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே வழக்கிடை விண்ணப்பம் எண்.138/2017, அனுமதிக்கப்பட்டதால், வழக்குரையை திருத்தம் செய்ய தாக்கல் செய்யப்பட்ட வழக்கிடை விண்ணப்பம் எண்.4/2021 அனுமதிக்கப்பட வேண்டும். இந்நிலையில், 1–ஆம் வாதியின் வாரிசுதாரர்கள் சேர்ப்பதில், யாரேனும் விடுபட்டுள்ளனரா என்பதை மட்டும் தான் ஆராய வேண்டியுள்ளது. வாரிசுதாரர்களை சேர்க்க வேண்டி தாக்கல் செய்யப்படும் மனுக்கள் அனைத்தும் சுருக்க நடவடிக்கைகள் (summary proceedings) தான். அசல் வழக்கு விசாரணை சமயம், அனைத்து

தரப்பினர்களும் சேர்க்க வேண்டும். மற்றபடி இடை மனுக்களில் அந்த மனுக்களில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதை மட்டும் தான் ஆராய வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, 1–ஆம் வாதியின் வாரிசுதாரர்கள் அனைவரும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மனு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்படாததற்கு காரணம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. 3–ஆம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை சேர்க்க வேண்டி உரிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதிலும், 1–ஆம் வாதியின் வாரிசுதாரர்களாக சேர்க்க வேண்டி மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாரிசுதாரர்களை சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அனுமதிக்கப்படும்போது, வழக்குரையை ஒவ்வொரு தருணத்திலும் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இந்த மனுக்களில் 1–ஆம் வாதியின் வாரிசுதாரர்கள் அனைவரும் சேர்க்கப்பட்டுள்ளதாலும், இந்த மனுக்களை அனுமதிக்கலாம் என இந்த பிரச்சனைகளுக்கு இந்த நீதிமன்றம் விடை காண்கிறது.

**இ.ம.எண்.18/2022**

முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**இ.ம.எண்.19/2022**

முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**இ.ம.எண்.20/2022**

முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதி, விரிவாக்கம் செய்து, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2022–ஆம் வருடம் நவம்பர் மாதம் 23–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2022.11.24 11:31:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.ம.எண்கள்.18/2022
முதல் 20/2022
உள்
இ.ம.எண்.4/2021
உள்
அசல் வழக்கு
எண்.20/2007
உத்தரவு – தெளிவு
நாள் – 23.11.2022